ஸ்ரீ சுப்ரமண்ய அஷ்டகம் / கராவலம்பம் தமிழில்

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

********

௧)

சுவாமி நாதனே ! கருணாகரனே !
ஏழை எளியோரின் சிநேகிதனே !
தாமரை மலர்போல் முகத்தவளாம்
பார்வதி தேவியின் திருமகனே !
மாமறை தேவர்கள் பணிகின்ற
மலரடி கொண்ட நாயகனே !

வள்ளி நாதனே என்னைநீ
அருட்கரம் நீட்டிக் காப்பாயே ! (௨)

௨)

தேவர் தேவனாய் ஆனவனே !
மகா தேவனின் புத்திரனே !
தேவன் இந்திரன் தொழுகின்ற
மெல்லிய மலரடி கொண்டோனே !
நாரதர், முனியோர் யாவருமே
போற்றி துதிக்கின்ற தூயவனே !

வள்ளி நாதனே என்னைநீ
அருட்கரம் நீட்டிக் காப்பாயே ! (௨)

PSDPrasad Music

ஸ்ரீ சுப்ரமண்ய அஷ்டகம் / கராவலம்பம் தமிழில்

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

********

3)

தினமும் உணவினை அளிப்பதனால்
தீராப் பிணிகளைத் தீர்ப்பவனே!
மனதால் விரும்பிடும் வரம்தந்து
சௌபாக். யங்கள் சேர்ப்பவனே !
பணிந்து யாவரும் துதிக்கின்ற
ப்ரணவ வடிவமாய் ஆனவனே !

வள்ளி நாதனே என்னைநீ
அருட்கரம் நீட்டிக் காப்பாயே ! (2)

PSDPrasad Music

4)

சூலம், சக்திவேல் எனவாக..
ஆயுதம் பலவாய் தரித்தவனே !
கோல மயிலேறி வருபவனே !
க்ரௌஞ்சனை வேலால் அழித்தவனே !
நீலமணி ஒளிர் குண்டலங்கள்
நெடிதாய் செவியில் பூண்டவனே !

வள்ளி நாதனே என்னைநீ
அருட்கரம் நீட்டிக் காப்பாயே ! (2)

ஸ்ரீ சுப்ரமண்ய அஷ்டகம் / கராவலம்பம் தமிழில்

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

********

5)

தேர்படை நடுவாய் வருபவனே !
தேவேந் திரனைக் காத்தவனே !
கூர்முனை அம்புகள் சரமாக
விரைவாய் எய்யும் திறனோனே !
சூரனை வென்று வதமுடித்து
தேவர்கள் புகழ்ந்திடத் திகழ்ந்தவனே !

வள்ளி நாதனே என்னைநீ
அருட்கரம் நீட்டிக் காப்பாயே ! (2)

6)

ரத்தினம், வைரம் ஜொலிக்கின்ற
மாலைகள், மகுடம் தரித்தவனே !
ரத்தின கவசம், குண்டலங்கள்
அழகாய் மேனியில் பூண்டவனே !
தாரகா சுரனை வென்றவனே !
தேவர்குலம் வணங்கும் ஆண்டவனே !

வள்ளி நாதனே என்னைநீ
அருட்கரம் நீட்டிக் காப்பாயே ! (2)

PSDPrasad Music

ஸ்ரீ சுப்ரமண்ய அஷ்டகம் / கராவலம்பம் தமிழில்

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

********

௭)

பஞ்சாட் சரத்தை ஒலித்தபடி
புண்ணிய கங்கையில் நீராட்டி
பஞ்சா மிர்தத்தை சேர்த்தபடி
"அமரர் கோன்" என்று உனைத்தானே
இந்திரன், முனியோர் மகிழ்வுடனே
மகுடம் சூட்டியே வைத்தாரே !
வள்ளி நாதனே என்னைநீ
அருட்கரம் நீட்டிக் காப்பாயே ! (௨)

௮)

நேர்த்தி செய்வாயே என்மனதை..
காம, ரோகங்கள் அவைநீக்கி...
கார்த்தி கேயனே அமுதமெனும்
கருணை பொழியுமுன் பார்வையினால் !
கீர்த்தி தரும்கலைகள் நாயகனே !
பூரண நிலவாய் ஒளிர்பவனே !
வள்ளி நாதனே என்னைநீ
அருட்கரம் நீட்டிக் காப்பாயே ! (௨)

௯)

ஸ்ரீ சுப்ரமண்ய அஷ்டகம் என்னும் துதியிதனை
தினமும் அதிகாலை படிப்பதனால்..
முன் ஜென்ம பாவங்கள் கணப் பொழுதில் விட்டொழியுமே...
ஸ்ரீ சுப்ரமண்ய பெருமானின் திருவருளால் முக்தியும் கிட்டுமே...!

PSDPrasad Music